# அச்சமில்லை

௫௦

ராஜாஜி

PREMIER

தமிழ்ப்பண்ணை

R
N43
164595

# அச்சமில்லை

ராஜாஜி

முதற்பதிப்பு—அக்டோபர் 1943
விலை அணு எட்டு

கமர்ஷியல் பிரிண்டிங் அன்
பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை

தமிழ்ப்பண்ணை மலர் 8

# அச்சமில்லை

ஆசிரியர் :
சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

தமிழ்ப்பண்ணை
தியாகராயநகர் :: சென்னை

## பதிப்புரை

இந்நூல் உபநிஷதம், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, சமயாசாரியர்களுடைய பாஷ்யங்கள், இவைகளில் உபதேசிக்கப்பட்ட உண்மைகளைச் சிக்கலின்றி அனைவரும் படித்துணரும் முறையில் ராஜாஜி எழுதிய வேதாந்தச் சுருக்கம். இந்தக் காலத்தில் இதைப் பிரசுரிப்பது, சமயத்துக்குச் செய்யும் தொண்டு என்று கருதி மிக்க மகிழ்ச்சியோடு இதை வெளியிடுகிறோம்.

தமிழ்ப் பண்ணையார்

# ஆணிவேர்

"இச்சகத் துளோரெலாம் எதிர்த்து நின்று, துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும், இச்சை கொண்ட பொரு ளெலா மிழந்து, பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை பெற்று விட்டபோதினும், நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டு போதி னும், பச்சை ஊன் இயைந்த வேற்படைகள் வந்த போதினும், உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதினும், அச்சமில்லை, அச்ச மில்லை, அச்சமென்ப தில்லையே" என்று பாரதியார் பாடினர். இந்த அச்சமின்மையைத் தருவது வேதாந்தம். இந்தியப் பண்பாட்டுக்கு மூலவேர் வேதாந்தம். முற்காலத்திலும் இக் காலத்திலும், இந்நாட்டின் சரித்திரத்தில் கண்ட தைரியம், வீரம், தியாகம், பெருமை எல்லாவற்றிற்கும் மூலசக்தி, வேதாந்தம். ஒவ் வொருவன் உள்ளத்திலும் வேதாந்தம் இப்போதும் ஊன்றி நிற்கிறது. புது நாகரிகம்,

புது உணர்ச்சிகள், புதுச் சம்பிரதாயங்கள் எவ்வளவு புகுத்தினாலும், வேதாந்த மூலவேர் அழிய வில்லை. நகர வாழ்க்கை, கிராம வாழ்க்கை, பணக்காரன் வாழ்க்கை, ஏழை களின் வாழ்க்கை, படித்தவர்களின் வாழ்க்கை, மூடர்களின் வாழ்க்கை, யோக்கியர்கள், அயோக்கியர்கள் எல்லாருடைய வாழ்க்கையி லும் வேதாந்த வாசனை வீசுகிறது. வேதாந் தமே இந்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு ஆணிவேர்.

# முதனூல்

வேதாந்தத்திற்கு முதல்நூல் உபநிஷத்து. உபநிஷத்து படிக்காதவன் இந்தியப் பண்பாட்டைப் பூரணமாய் அறிந்ததாகச் சொல்லிக்கொள்ள முடியாது.

பழைய நூல்களைப் படிக்கும்போது, நேற்று எழுதின புத்தகங்களைப்போல் அவை இருக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையக்கூடாது. அவை தோன்றிய காலத்தில் உலகமும், தேசமும், மக்கள் வாழ்க்கையும், தேசாசாரமும் முற்றிலும் வேறு நிலையிலிருந்தன. இதை மறந்துவிட்டு, தற்காலத்தில் விவாதிக்கப்பட்டுவரும் விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு, மூவாயிரம் வருஷங்களுக்கும் முன்பு எழுதப்பட்ட பழைய நூல்களை விமரிசனம் செய்யக் கூடாது. ஒவ்வொரு நூலும், அது தோன்றிய காலத்து வாழ்க்கையை ஒட்டித்தான் பேசும். நம்முடைய கற்பனை சக்தியையும் அறிவையும் செலுத்தி,

அக்காலத்து வாழ்க்கையை வைத்து முன்னோர் எழுதிய நூல்களைப் படிக்க வேண்டும்.

உபநிஷத்துக்களின் முக்கிய கருத்து என்னவென்றால், இவ்வுலகத்தில் பொருள் சம்பாதித்துப் பெறக்கூடிய போகங்களினாலும், அக்காலத்தில் முற்றிலும் உண்மை என்று கருதப்பட்ட வேதத்தில் சொல்லிய வேள்விகளைச் செய்து அவைகளின் பயனாக அடையும் சுவர்க்க போகங்களினாலுங் கூட, மனிதன் நிலையான சுகம் பெறமாட்டான்; ஆத்ம ஞானமே நம்மைப் பரம்பொருளுடன் ஒன்று படுத்திக் கரும பாசத்திலிருந்து விடுவிக்கக் கூடியது, அதுவே உலகத்திற்குப் பழுதற்ற சாசுவதமான நல்வழி என்று போதிப்பதாகும். இந்த உண்மையைப் படிப்படியாக உபதேசிக்கும் நோக்கத்துடன் சொல்லப்பட்ட உபநிஷத்து மந்திரங்கள் சில இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும். ஆனால், படிப்படியான உபதேச முறையைக் கவனத்தில் வைத்துப் பூரண முறையில் ஆராய்ந்தால், முரண் தீர்ந்து பொருள் விளங்கும். உபநிஷத்து தோன்றிய காலத்தில்

ஆசாரியனுடைய கூட்டுறவும் வாய்மொழி உபதேசமுமின்றிப் படிப்பே கிடையாது. வெறும் புத்தகப் படிப்பு அப்போது இல்லை. அச்சடித்த புத்தகப் பிரதிகள் தாமாகப் பரவும் சங்கதியே அக்காலத்தில் சாத்தியமில்லை.

# பிரபந்தங்கள்

வேதாந்தத்தில் சைவம் வைஷ்ணவம் முதலிய சமய பேதங்கள் இல்லை. பரம்பொருளை எந்தப் பெயர் வைத்துத் தியானித்தல் நலம் என்கிற வாதங்கள் அதில் இல்லை. ஸ்ரீ சங்கராசாரியர் எழுதிய வேதாந்த நூல்களில் நாராயணன் என்றே ஈசனைக் குறிப்பிடுவார். சைவ சித்தாந்த நூல்களில் பரம்பொருளை சிவன் என்றே குறிப்பிடுவார்கள். பெயர்களும், தியானத்திற்காக நாம் மனதில் கற்பித்துக் கொள்ளும் அங்கங்களும் சின்னங்களும், பூஜைசெய்யும் மூர்த்திகளும், ஓங்காரமுங்கூட, நம்முடைய உள்ளத்தைப் பரம்பொருளின் வழிச் செலுத்துவதற்கு உபயோகப்படும் சாதனங்களே யொழிய வேறல்ல. பொருள் ஒன்று, பெயர் பலவாயிருக்கும் அப்பொருளை,

"ஏக மூர்த்தி இரு மூர்த்தி
மூன்று மூர்த்தி பல மூர்த்தி
யாகி ஐந்து பூதமாய்
இரண்டு சுடராய் அருவாகி
நாகம் ஏறி நடுக் கடலுள்
துயின்ற நாராயணனே!"

என்றும்,

"முனியே! நான்முகனே!
முக்கண்ணப்பா! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்
கருமாணிக்கமே! என்கள்வா!"

என்றும் திருவாய்மொழியில் சடகோபன் பாடினர்.

எந்த சமயத்தில் வளர்ந்தவர்களுக்கும், வேதாந்தம் பொது. சைவ வைஷ்ணவப் பிரபந்தங்கள் வேதாந்தத்தைத்தான் பல வழியில் விளக்குகின்றன. உபநிஷதங்களைப் படிக்க இயலாதவர்கள் சைவ வைஷ்ணவப் பிரபந்தங்களை பக்தியுடன் படிக்க வேண்டும். அதுவும் செய்யவில்லையானல், தற்காலத்து வேதாந்தக் கவியாகிய பாரதியார் பாடிய 'விநாயகர் நான்மணிமாலை'யைப் படிக்கலாம். அது ஓர் உயர்ந்த வேதாந்த நூல். அதுவும் வேண்டாம்; தேச பக்தர்கள் பாடும் 'அச்சமில்லை', 'ஜயமுண்டு', 'சங்கு', 'ஜயபேரிகை'

முதலிய விடுதலைப் பாட்டுக்களை, அவைகளி லுள்ள ஆழ்ந்த பொருளை நிதானமாக யோசித்துத் தெரிந்து கொண்டு நிறுத்திப் பாடினால் அதுவும் வேதாந்தமே. பொருளைக் கவனியாமல் உரத்த குரலில் வெறுந் தாள இன்பத்திற்காகப் பாடுவதற்கென்று அல்ல, அந்தப் பாடல்களை பாரதியார் பாடியது. வேதாந்த விதையை அனைவருக்கும் தந்து நாட்டைப் பண்படுத்தி விலையுயர்ந்த பெரும் பயிரை வளர்க்கவே பாரதியார் பழைய வேதாந் தத்தைத் தேசீயப் புதுமணத்துடன் கலந்து அந்த அற்புதமான பாட்டுக்களைப் பாடித் தந்தார். உண்மை என்பது, சமயமும் கலையும் பண்பாடும் தைரியமும் ஊக்கமும் தேசீயமும் அனைத்தும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஒரு பொருள். வேதாந்தத்தின் முடிவு உல கத்தை விட்டுவிடுவது அல்ல. சுயநலத் தையும் சுகபோகப் பற்றுக்களையும் அபிமானத் தையும் தைரியமாகக் களைந்தெறிந்து எல்லாக் கடமைகளையும் அஞ்சா நெஞ்சுடன் செய்து வாழ்க்கையை நடத்துவதற்குச் சாதனமான ஆத்ம சக்தியை வேதாந்தம் தரும். இதற்கு, சுவாமி விவேகானந்தர், கீதா ரகசிய ஆசிரிய ரான லோகமான்ய திலகர், சுப்பிரமணிய

சிவம், அரவிந்தனர், பாரதியார், மகாத்மா காந்தி இவர்களே சான்ருவார்கள்.

சத்திய வாழ்வில் உழைக்க வேண்டிய உழைப்புக்கு உறுதியும் அச்சமின்மையும் தரக்கூடிய வேதாந்தத்தை அனைவரும் எளிதில் உணரும் முறையில் விளக்குவது இச்சிறு நூலின் நோக்கம். பேரருளும் அறிவும் பரம்பரை உபதேசமும் பெற்ற பெரியோர்களுக்குமே பல சிக்கல்களைத் தந்த இவ்விஷயத்தை ஒரு சிறு நூலில் எளிய நடையில் விளக்கப் பார்ப்பது வியப்பாக இருக்கலாம். ஆயினும் முயற்சியினல் நஷ்டமில்லை. வடமொழியில் மூடிக்கிடந்த உபநிஷத்துக்களை அனைவரும் ஆடியும் பாடியும் அனுபவிக்கக்கூடிய உருவத்தில் தமிழில் ஆழ்வார்களும் மாணிக்கவாசகரும் மற்றவர்களும் எடுத்துத் தேன்மாரியாகப் பொழிந்தார்கள். இக்காலத்திற்கு ஏற்ற ஒரு பணி, தத்துவ சாத்திரப் பரிபாஷைச் சொற்களைப் போட்டுக் கலவரப் படுத்தாமல் வேதாந்தத்தை விளக்கி வசன நூலாக எழுதி அச்சடித்துப் பரப்புவதேயாகும். குறைகள் பல இருப்பினும் ஓரளவு பயன்படும்.

# உடல் வேறு நான் வேறு

ஞானத்திற்கு முதற்படி நான் வேறு, தேகம் வேறு, என்ற உறுதியான உணர்ச்சிபெற வேண்டும். உடலுக்குள் உடலைத் தவிர ஆத்மா என்ற ஒரு தனிப் பொருள் உண்டா? அது உடலினின்றும் வேறுபட்ட ஒரு பொருளா? அல்லது, உடலின் லக்ஷணங்களையே ஒரு தனிப் பொருளாக அமைத்துக் கொண்டு தவருகப் பேசி வருகிறோமா? உடல் அழிந்ததும் அதனுடன் அதன் லக்ஷணமான ஆத்மாவும் முடிந்ததா, அல்லது தனிப் பொருளாகி வேறுபடுகிறதா? தனிப் பொருளாயிருப்பினும், அது உடலைப்போல் அழிந்து போகும் பொருளா, அல்லது ஓர் அழியாப் பொருளா? இந்த விஷயத்தைப் பற்றி மக்களுக்கு உறுதியான கொள்கை இல்லாதிருப்பதே உலகத்தில் காணப்படும் எல்லாக் குறைகளுக்கும் காரணம். சந்தேகம் தீரத் திருப்திசெய்து கொண்டாலுங்கூடத்

திரும்பத் திரும்ப அஞ்ஞானம் வந்து மூடிக் கொள்கிறது. உடலும் புலன்களும் அல்லாது, வேறு ஒரு பொருள், உடல் உணர்ச்சி உயிர் எல்லாவற்றையும் ஊடுருவித் தனக்குள் இருக்கிறது என்பதை அறிவுள்ள மனிதன் உறுதியாக உணர்ந்தானானால், ஞானமும் பக்தியும் பற்றற்ற வாழ்க்கையும் சத்தியமும் உண்டாகிக் குறைவுபடாமல் நிற்கும்; உலகம் கடைத் தேறும். அதற்காகவே உபநிஷத்துக்களில் பரமாத்மாவைப்பற்றிச் சொல்லுவதோடு, ஜீவாத்மாவைப்பற்றிப் பலவேறு விதமாகத் திரும்பத் திரும்ப விவகரிக்கப்படுகிறது. உடலைத் தவிர்த்து வேறு ஏதுமில்லை என்றால், வேதாந்தமில்லை. சரீரம் வேறு சரீரி வேறு என்று சந்தேகமற உணர்ந்தால், வேதாந்த வாழ்க்கை தானாகத் தோன்றிவிடும்.

# அறிவு மட்டும் போதாது

உள்ளத்தில் மறைந்து நிற்கும் ஆத்மாவைக் காணவேண்டும். காண்பது என்றால் சந்தேகம் முற்றிலும் அழிந்து உண்மையைப் பூரணமாக உணர்வது. உண்மையைக் காண அறிவும் ஆராய்ச்சியுமே போதாது. நற்குணமும் சீலமும் வேண்டும்.

எதிரில் நிற்கும் சுவரையோ மலையையோ பார்க்கும்போது, யோக்கியன் அயோக்கியன் இருவருக்கும் அது காணப்படும் அல்லவா? ஒரு பொருளைப் பார்க்கப் புலனடக்கம், அமைதி இவையெல்லாம் என்னத்திற்கு? ஆசாரியன் உதவியும் படிப்புமே அல்லவா அறிவுக்கு வேண்டியவை? இவை இருந்தால் வேறு குற்றங்கள் என்ன செய்யும்? இந்தக் கேள்விகளுக்கு விடையே வேதாந்த உபதேசத்தில் முக்கியமான பாகம்.

ஆத்மா என்பது உடலில் ஓர் அவயவத்தைப் போன்றதல்ல. அதற்குத் தனி

இடமில்லை. உடலையும் உள்ளத்தையும் ஊடுருவிக் கலந்து நிற்கிறது. உள்ளம் தெளிவு அடைந்தாலொழிய அதனுள் இவ்வாறு கலந்து மறைந்திருக்கும் பொருள் உருக்கொண்டு கோசரமாகாது. புறத்தில் நிற்கும் ஒரு பொருளைப் பார்க்கும் முறை வேறு, உள்ளத்திற்குள் ஊடுருவி நிற்கும் ஒரு பொருளைக் காணக்கூடிய முறை வேறு. மனம் தெளிந்தாலொழிய உள்ளத்திற்குள் ஊடுருவி நிற்கும் பொருள் வெளிப் படாது. மனம் தெளிவு படுவதற்குச் சீலமும் பற்றற்ற நிலையும் அமைதியும் வேண்டும். இந்தக் காரணத்தை நன்றாக ஆராய்ந்து உணர்ந்தால் உடலிலுள்ள ஆத்மாவைக் காண, ஏன் நல்லொழுக்கமும் சுத்தமான உள்ளமும் வேண்டும் என்பது விளங்கும். ஞான மார்க்கம் பக்தி மார்க்கம் கரும மார்க்கம் என்று மூன்றாகச் சொல்லப்பட்ட முறைகள் எல்லாம் ஒன்றே என்பதும் விளக்கமாகும்.

ஆகவே, மனமும் இந்திரியங்களும் சரிவர அடங்கப் பெறவேண்டும். இதற்கு விவேகம் வேண்டும். புத்தி கலக்கமற்று ஒளிபெற வேண்டும். ஒளி பெற்ற புத்தியின் வேகம் மனதின் மேல் செல்லவேண்டும்.

இவ்வாறு அமைதி நிலையை அடையா விடில் திரும்பத் திரும்பக் கலக்கம் ஏற்படும். இடையறாத கவனத்துடன் புத்தி, மனம், இந்திரியங்கள் இவைகளை அடக்கி ஆள வேண்டும். இந்த முயற்சிக்குத்தான் யோகம் என்று பெயர். இந்த நிலையை அடைந்தால் உள்ளத்தில் மறைந்து நிற்கின்ற ஆத்மாவைக் காணப் பெறலாம்.

யோக முயற்சியால் கண்ட ஞானமானது எப்போதும் ஒரே நிலையில் நிற்காது. உள்ளத்தின் நிலையை மிக்க கவனமாய்க் காப்பாற்ற வேண்டும். உதயாஸ்தமனத்தைப் போல் ஒரு சமயம் தெளிவடைந்து தோன்றியது பிறகு மறைந்துபோகும். மறுபடியும் உதயமாகி மறுபடியும் மறையும். யோக நிலையை ஒரே படியாக அடைந்து விடுவது கடினம். ஆயினும் முயற்சியைத் தளரவிடக் கூடாது.

# உலகம் பொய் அல்ல

உலகம் சர்வேசுவரனுடைய மாயை என்பதை யாவரும் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதன் பொருள், உலகம் பொய் என்பதல்ல. உலகம் உண்மையே, பொய்யல்ல.

மாயையைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் பரம்பொருளைப் பற்றியும் உபதேசம் செய்த பெரியோர்கள் அனைவரும் உலகம் உண்மை என்றே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள். உபதேசத்துக்கு மாறாக நடக்கும் பொய்யர்களைப்பற்றிச் சொல்லவில்லை. பூரண மெய் வாழ்க்கை நடத்திய ஞானிகளின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலே, உலகமும் வாழ்க்கையும் வினைப் பயனும் உண்மை என்றே அவர்கள் எண்ணினார்கள் என்பது உறுதியாகிறது. இப்படியிருந்தும் அவர்கள் கொள்கையானது எல்லாம் மாயை, எல்லாம் ஈசுவரனுடைய உருவமே, எல்லாம் ஈசுவரன் செயலே என்றால், இதற்குப் பொருள் என்ன ?

ஈசனே சகலமும் என்றால் அனைத்தின் உயிரும் அவனே என்று பொருள். உடலுக்கு ஆத்மா எவ்வாறோ அவ்வாறு எல்லாப் பொருள் களுக்கும் எல்லா உயிர்களுக்கும் உள்ளே இருக்கும் அந்தர்யாமி ஈசன். நான் போனேன், நான் வந்தேன், நான் செய்தேன் என்றால், அது கேவலம் உடலின் செயலான போதிலும், உடலினுக்குள் எல்லாவற்றையும் நடத்தும் ஆத்மாவின் கருமமே யாகும். அது போலவே ஆத்மாவுக்கு ஆத்மா ஈசன். ஆத் மாவின் செயல் ஈசன் செயல். சகலமும் ஈசன் செயல், சகலமும் ஈசன் உருவம். ஈசனும் உண்மை, ஈசன் ஊடுருவி நிற்கும் சகல உயிர் களும் உண்மையே.

வெயிலினால் தான் நிழல் உண்டாகிறது. ஆனால் நிழல் பொய்யல்ல, உண்மையே. உடல் உண்மையே யாயினும், உடலுக்கு உயிரும் உண்மையும் தருவது கண்ணுக்குக் காணாத உயிரே அல்லவா? அந்த உயிருக்கு உயிரும் உண்மையும் தருவது பரம்பொருள். ஆத்மா இன்றி உடல் உயிரற்ற சவமாகிவிடும். அதைப் போலவே, உடலுக்குள் நிற்கும் ஆத்மாவுக்குப் பரம்பொருளே இன்றியமை யாத அந்தராத்மா.

உலகத்திலுள்ள ஜீவன்கள் பரமாத்மாவுக்குச் சரீரங்களைப் போலாகும். சர்வ வியாபகமான பரம்பொருளுக்கு ஜகத்து முழுதும், ஒவ்வொரு தனிப்பொருளும், சரீரமாகும். அனைத்தும் சேர்ந்து பரமனுக்கு ஒரு சரீரமாகும். அவையே அவனுக்குத் தனித்தனியான சரீரங்களுமாகும். அந்தராத்மா இன்றி எல்லா உயிரும் வெறுஞ் சவம் போலாகும். அசேதன இயற்கைச் சக்திகளுக்கும் மூலாதாரமாயுள்ளது, எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளே.

மாயை என்ருல் அனைத்தும் பொய், நாம் ஏதேனும் செய்துகொண்டு போகலாம் என்றல்ல. வேதாந்த உபதேசம் இது வன்று. அனைத்தும் உண்மை, அனைத்தும் நியதிக்குட்பட்டது என்பதே வேதாந்த உபதேசம்.

# அனைத்திலும் ஓர் உயிர்

ஆகவே, உடலுக்குள் அதற்கு உயிர் தரும் ஆத்மா ; ஆத்மாவுக்குள் அதற்கு உயிர் தரும் பரம்பொருள் : இது உலகத்தின் அமைப்பு. ஒரே ஆத்மாவானது பலவிதமான உடல்களைப் பல பிறவிகளில் தரிக்கிறது. அப்படித் தரிக்கும் காலத்தில் தன் தேகமே தானாக நினைத்து வாழ்கிறது. இதைப் போல், பரம்பொருளும் பல ஆத்மாக்களில் ஒரே காலத்தில் அந்தராத்மாவாக ஊடுருவி நிற்பதை ஒருவாறு உணரலாம். ஒரே காலத்தில் எல்லா ஜீவன்களும் பரமாத்மாவுக்குச் சரீரங்களாகின்றன. அந்தராத்மா ஒன்றேயாயினும், ஜீவன்கள் தனி ஜீவன்களாக வாழ்கின்றன. இதைத்தான் மாயை என்பது. கல்வி கற்றவன், பாமரன், வீரன், கோழை, பலவான், நோயாளி, உயர்ந்தோன், தாழ்ந்தோன், இன்னும் எல்லா ஜீவகோடிகளிலுமே அந்தராத்மாவாக எல்லா

வற்றையும் நடத்திக்கொண்டு நிற்பது ஒரே பரம்பொருள்.

நமது ஆசாபாசங்கள் சுகதுக்கங்கள் இவைகளில் ஆத்மாவானது மறைந்துபோய்க் கிடக்கிறது. அவ்வாறு மறைந்திருக்கும் ஆத்மாவினுக்குள் அதன் ஆத்மாவாகி நிற்கும் அந்தர்ராத்மா நம்அறிவுக்குமுற்றிலும் மறைந்து போகிறது. புனிதப் பரம்பொருளான அந்தராத்மா மாசு படாது; ஆனால் மாசுகளின் மத்தியில் மூடிக்கிடக்கிறது. மனதை ஒருமைப் படுத்திப் புலன்களை அடக்கி, புறப்பொருள்களினின்று உள்ளம் மீண்டு மாயை நீங்கினால், உள்ளத்தில் குடிகொண்டுள்ள ஆத்மாவையும் ஆத்மாவுக்கு ஆத்மாவான பரம்பொருளையும் காணலாம். பரமாத்மாவே அனைத்தினுள்ளும் நின்று நடத்துவது என்பதை உணர்ந்துவிட்டால் இன்பதுன்பங்கள் மறைந்து போகும். இதுவே வேதாந்தம்.

இந்தத் தத்துவம் வேறொரு விதமாகவும் உபநிஷத்தில் விளக்கி உபதேசிக்கப் படுகிறது. வெயிலையும் நிழலையும் பார்க்கிறோம். வெயிலின் வழியில் நிற்கும் பொருளானது நிழலை உண்டாக்குகிறது. வெயிலுக்கு ஏற்பட்ட தடை

அல்லது குறையே நிழலின் வடிவத்தை உண்டாக்குகிறது. வெயிலுக்கு வடிவம் இல்லை. அது சமப்பிரகாசம் வீசுகிறது. நிழலுக்கு வடிவம் உண்டு. ஆனால் ஒளிப் பொருளாகிய வெயிலின் குறைக்குத்தான் நிழல் என்று பெயர். வெயிலே நிழல் ஆகிறது. குறையும் தடையுமின்றி நின்றால், வெயில் சமப் பிரகாச மாக வீசும். தடைப்பட்ட இடத்தில் நிழல் தோன்றுகிறது. இவ்வாறே ஜீவாத்மாக்கள் பரமாத்மாவின் சமப்பிரகாசத்தி னிடையில் தோன்றுகிற நிழல்களாகும். தடையை நீக்கிய வுடன் நிழலும் வெயிலும் ஒன்றாகிவிடும். மனித னுடைய கரும பலன்கள் நிழல்களை உண்டாக்கு கின்றன. ஆனால் நிழலின் உயிரும் அதன் உண்மைப் பொருளுமாக இருப்பது வெயில் தான். அந்த நிழலையே ஜீவாத்மா என்று வைத்துக்கொண்டு பேசுகிறோம்.

# விடுதலை

மோக்ஷம் என்றால் பரம்பொருளை அடைவது. அது, ஓர் ஊரிலிருந்து வண்டி ஏறி அல்லது நடந்து போய் இன்னொரு ஊரை அடைவது போல் அல்ல. அந்தராத்மாவும் தானும் ஒன்றே என்ற ஞானம் உண்டாகி, வெயிலும் நிழலும் ஒன்றாதல் போல் உண்மையை அடைதலே மோக்ஷம்; வேற்றுமை உணர்ச்சி தீர்ந்து அனைத்தும் ஒரு பரமாத்மாவின் உடல் என்பதை உணர்தல். மோக்ஷம் என்றால் வடமொழியில் விடுதலை என்றே பொருள். மோக்ஷம் என்ற மொழியின் பகுதிக்கு 'விடு' என்று பொருள். விடு என்ற தமிழ்மொழியினின்று விடுதலை அல்லது வீடு என்ற மொழி உண்டாவதுபோல், 'மோக்ஷம்' என்கிற சம்ஸ்கிருத பதமும் உண்டாகிறது. மோக்ஷம் அல்லது விடுதலை என்பது ஒரு நிலை; ஓர் ஊரோ, உலகமோ, கட்டிடமோ, மாளிகையோ தோட்டமோ அல்ல. ஆகையால் நம்மாழ்வார்,—



164595
R
N43

"நன்றாய் ஞானம் கடந்து போய்
நல்லிந்திரிய மெல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும் பெரும் பாழ்,
உலப்பி லதனை உணர்ந்துணர்ந்து
சென்று, ஆங்கு இன்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை அற்றால்,
அன்றே, அப்போதே வீடு,
அதுவே வீடு, வீடு ஆமே!"

"அதுவே வீடு, வீடு பேற்று
இன்பந்தானும் அது; தேறி
எதுவே தானும் பற்றின்றி
யாதுமிலிக ளாகிற்கில்,
அதுவே வீடு; வீடு பேற்று
இன்பந்தானும் அது; தேறாது,
எதுவே வீடு? எது இன்பம்? என்று
எய்த்தார், எய்த்தார், எய்த்தாரே!"

என்கிற பாசுரங்கள் பாடினார்.

## விடுதலைக்கு வழி

பரம்பொருளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை உணர்ந்தோமானால் ஜீவனுக்கும் ஜீவனுக்குமுள்ள வேற்றுமை உணர்ச்சி அற்றுப் போகும். வேற்றுமை உணர்ச்சி நீங்குவது தூக்கத்தினின்று விழிப்பது போல். இரவில் ஒருவன் கனவு காண்கிறான். அதில் தோன்றும் சம்பவங்களினால் கஷ்டப்படுகிறான். அவனுக்கு எவ்வாறு கஷ்ட நிவாரணம் உண்டாகும்? தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து, கனவைக் கனவென்று காண்பதே நிவாரணம். அதுபோல், ஆத்மாவைப் பிடித்து நிற்கும் வேற்றுமை உணர்ச்சி யினின்று விழித்தெழுந்து துக்கங்களி னின்று விடுவித்துக்கொள்ள வேண்டும். ஆகையால், "எழு! எழு! விழித்தெழு!" என்று உபநிஷத்துக்கள் முழங்குகின்றன. உள்ளத்தில் உள்ளது பரம்பொருள் என்றறிவது நல்ல தூக்கத்தினின்று விழிப்பது போன்ற ஒரு நிலை மாறு

பாடு. அடுத்த அறையில் சுப்பன் இருக்கிறான் என்று சொல்லக் கேட்டு விஷயத்தைச் சும்மா தெரிந்து கொள்வதுபோல் அல்ல.

மனோ நிலையே முற்றும் மாற வேண்டும். தூக்கத்தினின்று விழிப்பது சுலபம். ஆனால் சம்சார மாயை என்ற பெருந் தூக்கத் தினின்று விழிப்பது எளிதன்று. விழிக்க வேண்டும் என்கிற விருப்பம் உள்ளத்தில் முதலில் பொங்க வேண்டும். இரண்டாவதாக, அந்தரத்தில் கயிற்றைக் கட்டி அதன்மேல் கழைக் கூத்துக்காரன் நடப்பதுபோல் இடை விடாத ஜாக்கிரதை வேண்டும். புலன்களையும் மனதையும் அடக்கி, ஒழுக்கத்தைக் காப்பாற்றி, உள்ளத்தை மாசற்றநிலையில் நிறுத்திக்கொள்ள வேண்டும். மறுபடி வேற்றுமை உணர்ச்சியில் வீழாமல் காத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

அறியாமையால் தூண்டப்பட்டு அநித்திய சுகங்களை அடைய விரும்புகிறோம். அதற்காகப் பல காரியங்கள் செய்கிறோம். விரும்பிய சுகங்களை அடையாததனால், அல்லது அடைந்து பிறகு இழந்ததனால், கோபம் துவே ஷம் துக்கம் இவைகளை உண்டாக்கிக் கொள்கி றோம். இதனால், முன்னைவிட அறியாமை அதிகரிக்கிறது. 'தான்' என்கிற அகங்கார

மும் 'தனது' 'தனக்கு' என்ற பொருட் பற்றும் ஆசையும் முன்னைவிட அதிகமாகின்றன. இவ்வாறு உண்மையி னின்று வர வர வெகுதூரம் விலகிப் போய்விடுகிறோம். அப்படிப் போகாமல், உண்மையை அணுகுவதே விடுதலைக்கு வழி. அடக்கமும், சீலமும் அவசியம். உள்ளத்திலும் நம்மைச் சுற்றிலும் இருப்பது பரம்பொருள் என்றறிந்து அப் பரம் பொருளைச் சிரத்தையுடன் தியானித்தல் அவசியம்.

**காக்கை, குருவி எங்கள் ஜாதி,—நீள்**<br>
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**<br>
**நோக்கும் திசை யெல்லாம் நாமன்றி வேறில்லை,**<br>
**நோக்க நோக்கக் களியாட்டம்!**

என்று பாரதியார் ஆடிப் பாடியது இதைத் தான்.

பூரணமான ஞானம் அடையாமற் போனலும் முயற்சியை விடலாகாது. அரைகுறையாக அடைந்த ஞானமே நன்மை தரும். முயற்சியினலேயே மாசுகள் ஓரளவு நீங்கப் பெற்று நற்குணங்களை அடைவோம். வாழ்க்கையில் நாம் செய்யப் பார்க்கும் பல பாவச் செயல்களினின்று தப்புவோம். முயற்சியே நம்மை மேல்நிலைக்கு உயர்த்தும்.

## வினைப்பயன் விதி

உடல் என்பது ஒரு கருவி. நல்ல அழகிய கருவி. கருவியும் கருவிக்கு எஜமானனும் ஒன்ருக மயங்கி நிற்கும் ஒரு வியப்பான கருவி அவ்வாறே உடலுக்கு எஜமானனை ஜீவாத்மாவும் ஒரு கருவியே. அந்தக் கருவியை ஆள்வது அதனுள் அந்தர்யாமியாய் நிற்கும் கடவுள். அதுவும் ஒரு வியப்பான நிலை. ஆள்வோனும் ஆளப்படும் கருவியும் மயங்கி நிற்கும் நிலை. உடலும் உடலில் சூக்ஷ்மமாக வேலை செய்யும் புலன்களும் உடலுக்குள் பொறுப்புடன் நிற்கும் ஆத்மாவுக்குத் துரோகம் செய்யாமல் நற்பணி செய்ய வேண்டும். அதைப் போலவே அந்த ஆத்மாவும் தனக்குள் கோயில் கொண்டிருக்கும் பகவானுக்கு ஒரு நற்கருவியாக அமைந்து ஒழுக வேண்டும்.

உடல், வாக்கு, மனம் இவைகளைக் கொண்டு வினைகள் செய்யப்படுகின்றன.

இந்த வினைக்கு இந்தப் பயன் என்பது இயற்கைச் சாசனம். காரண காரிய சம்பந்தம் என்பது மாறா நியதி. பயன் என்பது வினையில் மூடிக்கிடக்கிறது: அந்தந்த விதையில் அந்தந்த மரம் மூடிக் கிடப்பது போல். வெயிலில் நீர் உலர்ந்து ஆவியாகிப் போகும். இதை மாற்றமுடியாது. வெயிலும் நீரும் சேர்ந்தால், பயன் அந்தச் சேர்க்கையிலேயே கிடக்கிறது. இதைப் போலவே அனைத்தும். ஆழ்ந்து யோசித்து உணர்ந்தால் உலகமெல்லாம் இப்படியே மாறாத நியதிப்படி வினையும் பயனுமாக நடைபெறுவதைக் காண்போம். இதுவே 'விதி' என்று சொல்லப்படும் வேதாந்த தத்துவம். 'விதி' என்றால் நியதிக்கு அடங்காத ஒரு அநியாய நிகழ்ச்சி என்று பொருள் கொள்ளுவது தவறு.

# ஆத்ம சுதந்திரம்

விதி வசம் என்றால் செய்த வினையின் பயனைத்தான் எதிர்பார்க்க வேண்டும் என்பது. ஒருக்காலும் வினை தன் பயனை விளைவிக்காமல் போகாது. செய்த வினையினால் அதன் உண்மைப் பயன் தான் உண்டாகும். வேறொன்று உண்டாகாது. அனைத்திலும் ஈசன் இருக்கிறான். ஆகையினால் நியதி தவறாமல் ஒவ்வொன்றும் விதி அல்லது நியதிப் படிதான் நடக்கும். இதை மாற்றவே முடியாது. பயனை வேண்டின் அதைத் தரும் வினையைச் செய்ய வேண்டும். ஒன்று செய்து வேறொரு பயனை அடையமுடியாது. செய்ய வேண்டிய செயலைச் செய்தால் பயனுண்டு. இல்லாமற் போகாது. இதுவே ஆத்மாவின் சுதந்தரம். மனோ வாக்குக் காயம் மூன்றுமே வினை செய்யும். எண்ணிய எண்ணங்கள், பேசிய

பேச்சுக்கள், செய்யும் செய்கைகள் எல்லாம் தத்தம் பயனை விளைவிக்கும். இதை ஏமாற்ற முடியாது.

எல்லாம் விதிவசம் என்றால் அறிவும் புருஷ யத்தனமும் பயன்படாது, சும்மா இருத்தலே நலம் என்பதல்ல. "ஆமடா, விதிவசந்தான். அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை என்பது ஈசனுடைய விதி. சாத்திர மில்லாத தேசத்திலே நோய்கள் விளைவது விதி" என்று பாரதியார் சொன்னார்.

காரணங்கள் இருக்க அதை அறியாத போது நாம் விதி, விதிவசம், அதிருஷ்டம் என்கிறோம். ஆனால் இது அறிவைச் செலுத்தாத குற்றத்தை ஒப்புக்கொண்டு பயனைக் கண்டு வருத்தப்படுவதே யொழிய வேறன்று. 'அதிருஷ்டம்' என்றால் காணப்படவில்லை என்று பொருள். அவ்வளவே யொழிய, நியதிக்கு உட்படாதது என்றல்ல.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மூன்று விதமான பயன் உண்டாகும். வெளி யுலகத்தில் உண்டாகும் விளைவு ஒன்று. நம்முடைய உடல், புலன், உள்ளம் இவைகளுக்கு அச்செய்கையினால் உண்டாகும்

பயிற்சிப் பயன் இரண்டாவது. மூன்றாவதாக, உள்ளத்தினுள் இருக்கும் ஆன்மாவுக்கு அதனால் உண்டாகும் முன்னேற்றம் அல்லது பிற்போக்கு. செய்யும் செயலைப் போலவே எண்ணும் எண்ணங்களும், பக்தியும், பிரார்த்தனையும், பச்சாத்தாபமும்; இவை அனைத்துக்கும் இயற்கை நியதிப்படி இந்த மூன்று விதமான விளைவுகள் உண்டாகும். மூன்று விளைவுகளும் நல்ல விளைவாக இருக்கலாம் அல்லது நஷ்ட விளைவாக இருக்கலாம். அது செயலின் தன்மையைப் பொறுத்தது.

முன் ஜென்மங்களில் செய்த கருமங்களினாலும் கொண்ட பற்றுக்களினாலும் நாம் சில சுபாவ குணங்களுடன் பிறக்கிறோம். இந்தச் சுபாவங்களை முழுதும் அடக்கி விடலாம் என்று எண்ணித் துறவியாகப் போவதில் பயன்பெற மாட்டோம். பக்குவமடையாமல் துறவியாவது வெறும் வேஷமாய் முடியும்.

ஒருவன் பழவினைகளினின்று விடுதலை அடைவது, அல்லது முன்னிருந்த பந்தத்திற்கு இன்னும் கூடச் சேர்த்து அதிகமான பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளுவது, இது

அவன் எப்படி நடந்து கொள்ளுகிருனே அதைப் பொறுத்திருக்கிறது. ஆனல், சுபாவ குணங்களை வென்று விடுதலைக்கு வேண்டிய முயற்சி செய்யும் சுதந்திரமும் சக்தியும் ஜீவனுக்கு உண்டு.

**ஜயமுண்டு பயமில்லை, மனமே,**
**பயனுண்டு பக்தியினுலே,**
**புயமுண்டு குன்றத்தைப்போலே,**
**மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்.**
**விதியுண்டு, தொழிலுக்கு விளைவுண்டு.**
**அலைபட்ட கடலுக்கு மேலே,—சக்தி**
**அருளென்னும் தோணியினுலே**
**கரையுற்றுத் துயரற்று விடுபட்டு**
**ஜயமுண்டு பயமில்லை, மனமே''**

என்று பாரதியார், கரும நியதியினல் ஏற்பட்டிருக்கும் ஆத்ம சுதந்தரத்தை எடுத்துக் காட்டிப் பாடினர்.

# உபதேசமுறை வேறுபாடுகள்

உடலும், ஆத்மாவும், ஆத்மாவுக்கு ஆத்மா வான பரமாத்மாவும் ஆகிய மூன்று பொருள்களின் பரஸ்பர சம்பந்தம் என்ன என்பதை உபதேசிக்கும்போது, மூன்றும் பொருளான பரமாத்மாவின் இலக்கணங்கள் மாயையில் கிடக்கும் நம்முடைய அறிவுக்குப் பூரணமாக எட்டாதபடியினல், ஆசாரியர்கள் பல வேறு உபதேச முறைகளைக் கையாள் கிருர்கள்.

உடலுக்கு உடல்தன்மையைத் தருவது ஆத்மா. ஆத்மாவுக்கு ஆத்மத்தன்மையைத் தருவது பரமாத்மா. உடலில் அதன் உயிரைத் தாங்கி நிற்பது ஆத்மா; ஜீவாத்மாவின் ஒப் பற்ற திவ்விய சொரூபத்தைத் தாங்கி நிற்பது பரமாத்மா. ஜீவலோகத்தில் உடலும் உயிரும் சேர்ந்து சுகமாகவும் ஆனந்தமாகவும் ஒன்ருய் இருப்பது போல, ஜீவாத்மாக் கள் தம் உயிராகிய பரமாத்மாவுடன் யாதொரு

குறைவும் அறியாமையும் வேற்றுமையுமின்றி ஒன்றாகிச் சுகமாகவும் ஆனந்தமாகவும் இருப்பது மோக்ஷம். இவ்வாறு பரமாத்மாவுடன் ஒன்று சேர, சீலமும் அடக்கமும் பக்தியும் வேண்டும். இது சில ஆசாரியர்களின் விளக்கம்.

பரமாத்மாவின் நிழலே ஜீவாத்மா. அறியாமையால் நிழல் வேறு பொருள் வேறு என்கிற உணர்ச்சி உண்டாயிருக்கிறது. ஆசை, பற்று, கோபம், துவேஷம் இவைகளால் இந்த வேற்றுமை உணர்ச்சி பெருகிக் கொண்டே போகிறது. அறிவு உண்டானல் இரண்டும் ஒன்றாகிவிடும். சூரியனும் தண்ணீரில் காணும் சூரிய பிம்பங்களும் போல் வேற்றுமை. தண்ணீரை எடுத்துவிட்டால் சாயைகள் இல்லை. பிம்பம் சூரியனுடன் ஒன்றுபட்டுப் போகிறது. அவ்வாறே ஜீவாத்மாக்களான பிம்பங்கள் பரமாத்மாவுடன் ஒன்றுபட்டுப் போகும். இதுவே விடுதலை. இதற்கு வேண்டிய பூரண அறிவை அடைய, சீலமும், பக்தியும், அடக்கமும், அமைதியும் வேண்டும். புலன்கள் அவ்வளவும் இரவில் தூங்கும்போது எவ்வாறு உயிரில் அடங்கி முற்றிலும் மறைந்து போகின்றனவோ அவ்வாறு, அறிவடைந்த ஜீவன்கள்

பரம்பொருளில் அடங்கி ஒன்றுபட்டுப் போய் விடுகின்றன. இது சில ஆசாரியர்கள் விளக்கும் முறை.

இவ்வளவே துவைத அத்துவைத விசிஷ்டாத்துவைத சைவசித்தாந்த முறைகளிலுள்ள விளக்க வேறுபாடுகள். இதனால் கலவரப் பட வேண்டிய காரணமில்லை. விளக்க முறைகள் வேறுபட்டாலும் விடுதலைக்கு வழி என்று சொல்லப்பட்ட வேதாந்த வாழ்க்கை அனைத்திலும் ஒன்றே.

# வேதாந்தியின் வாழ்க்கை

வேதாந்த உணர்வு அடைந்தவன் அதாவது 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள்' கண்டவனுடைய வாழ்க்கை எவ்வாறு இருக்கும்?

(1) தன் உள்ளத்திலும் சுற்றியுள்ள உலகத்திலுள்ள ஒவ்வொரு சேதன அசேதனப் பொருளிலும் பரம்பொருள் இருப்பதை எப் போதும் நினைவில் வைப்பான்.

(2) காமம், குரோதம், ஆசை என்ற வேகங்களுக்கு உள்ளத்தில் இடங் கொடுக்க மாட்டான்.

(3) பிறப்பினலோ அல்லது சந்தர்ப் பத்தினலோ அல்லது தான் அடைந்த ஸ்தானத்தின் பயன கவோ சமுதாயத்தில் தனக்கு ஏற் பட்ட கடமைகளை சுயநலப் பற் றின்றிக் கண்ணும் கருத்துமாகக் குறைவின்றிச் செய்வான்.

(4) இந்திரியங்களைக் காத்து, வேலை, ஆகாரம், ஓய்வு, விளையாட்டு, தூக்கம், இவைகளில் நியமத்தோடு பரிசுத்த வாழ்க்கை நடத்துவான்.

(5) கஷ்டங்களைக் கண்டு மனம் கலங்காமல் துயரம் மகிழ்ச்சி எது வரினும் தைரியமும் அமைதியும் இழக்காம லிருப்பான்.

# வேத வாழ்வு ஏன்?

இந்த அட்டவணை எனக்கு என்ன பயன்படும் ? இவையெல்லாம் ஞானிகளுக்குத் தான் சாத்தியம் என்று திகைக்க வேண்டாம்.

"இந்த முறையில் எடுத்த சிறு முயற்சிக்கும் நல்ல பலனுண்டாகும். நஷ்டம் கிடையாது. பத்தியம் தவறினல் மருந்தானது தீமையே விளைவிக்கும் என்கிற வைத்திய சாத்திர நியதியைப்போல் அல்ல. குற்றங் குறைகள் ஏற்பட்டதனுல் அபாயம் ஏதும் இல்லை. இந்தத் தருமத்தில் சிறிது நடத்தினுலும் நன்மை உண்டாகும்" என்பது வேதாந்தத்தைப் பற்றிய சாத்திர உறுதி.

மறுமைக்கு நல்லதாகும் என்பதில் ஒருவனுக்கு என்ன ஊக்கம் பிறக்கும்? அடுத்த ஜென்மத்தில் பழைய நினைவுகள் ஒன்றுமில்லாமல் அல்லவோ நாம் பிறப்போம்? முன் ஜென்மத்து விஷயங்கள் இப்போது நினை

வில்லை. இந்த ஜென்மத்து நிகழ்ச்சிகளின் நினைவு அடுத்த ஜென்மத்தில் இருக்கப் போவ தில்லை. ஆகவே, நன்மை செய்தால் என்ன, தீமை செய்தால் என்ன? தற்கால இன்பத் தைத் தேடிச் சுகமாக வாழ்வோமே! அடுத்த பிறவியில் நான் பிறந்தால், அப்போது வேறு மனிதன். அவனுக்கும் எனக்கும் என்ன சம் பந்தம்? நினைவு இருந்தாலல்லவோ அவனும் நானும் ஒன்று? அவனுக்காக நான் ஏன் சிரமப்பட வேண்டும்? மரணத்தோடு இந்த வாழ்க்கையின் நினைவுகள் முடிவு அடையு மல்லவா? இவ்வாறெல்லாம் ஆட்சேபிக்கலாம்.

இந்த ஆட்சேபணையில் உண்மையில்லை. சுயநலமும் தற்கால இன்பமும் மனிதனுக்குத் திருப்தி தருவதேயில்லை. எல்லாரும் தருமத்தை விட்டுவிட்டால் உலகம் வரவரக் கெட்டுப்போய்ப் பாழாக முடியும். இதைப்பற்றிச் சந்தேகமில்லை. ஆனல், மனிதர்களின் போக்கு அவ்வாறில்லை. ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் ஊரின் நன்மை யைக் கருதிப் பாடுபடுகிறுர்கள். தாங்கள் ஒரு நாளும் பாராத தங்கள் ஊரைச் சேர்ந்தவர் களின் நன்மைக்காகத் தங்கள் சுகபோகங்களை மக்கள் குறைத்துக்கொள்வதைப் பார்க்கிறோம்.

ஊர் எக்கேடுகெட்டால் என்ன என்று இருப்ப தில்லை. அவ்வாறே நாட்டுக்கும் தேசத்திற்கும் சுகமுண்டாக்கக் கருதி, சுயநலத்தை இழந்து மக்கள் கஷ்டப்படுவதையும் பார்க்கிறோம். சாலையிலுள்ள மரங்களின் நிழலை அனுபவிக்கப் போகும் ஜனங்கள் யாரோ நாம் காண்பதில்லை. ஆனாலும், வருங்காலத்து மக்களுக்கு நிழல் கொடுக்க, இப்போது செடிகளை நட்டு வளர்க்கிறோம். இந்த விசால புத்தியை இன்னும் ஒருபடி பெருக்கி, உலகத்தின் நன்மையையும் வருங்கால சுகத்தையும் உத்தேசித்து, நம்முடைய முன்னோர் கண்ட உண்மையை உணர்ந்து, பாவங்கள் உலகத்தில் வளராதபடி அனைவரும் வேத வாழ்க்கை நடத்தித் தங்கள் ஆத்மாக்களை இந்த ஜென்மத்தில் உயர்த்திக் கொள்ள வேண்டும். வருங்கால உலகத்தின் நன்மை இந்த ஜென்மத்தில் நம் கையில் இருக்கிறது. இந்தப் பொறுப்பை உணர்ந்து நடப்பதே ஞானம்.

ஒப்புரவு ஊரைக் காக்கும். அரசும் தேச பக்தியும் நாட்டைக் காக்கும். வேதாந்தம் உலகத்தைக் காக்கும்.

ஓம்

COVER DESIGNED & PRINTED B
P. A. S. PRESS, POST BOX 3
MOUNT ROAD :: MADRA